செய்தி வெளியீடு எண். 86 நாள். 08.02.2018

## வேளாண்மைத் துறை சார்பாக நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையில் கரும்பு சாகுபடி திட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடிக்கான கன்றுகளை வழங்கினார்

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், கனகம்மாசத்திரம் கிராமத்தில் வேளாண்மைத் துறை சார்பாக நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையில் கரும்பு சாகுபடி திட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடிக்கான கன்றுகளை இன்று (08.02.2018) வழங்கினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக விவசாயிகளின் உற்பத்தியை இரண்டு மடங்கு உயர்த்தி, மும்மடங்கு வருமானம் அடைய அரசு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் கரும்பு உற்பத்தியை பெருக்கி அதன் மூலம் மகசூல் பெற்று லாபம் பெற ஏதுவாக அரசு நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்திற்கு 310 ஹெக்டேர் இலக்கு நிர்ணயித்து ரூ.380 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சிறு / குறு விவசாயிகளுக்கு ரூ. 1 இலட்சம் மானியமும் (100%), இதர விவசாயிகளுக்கு ரூ. 0.75 இலட்சம் மானியமும் (75%) வழங்கி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் வாயிலாக சொட்டுநீர் பாசன அமைப்புகள் நிறுவித் தரப்படுகிறது.

ஒரு விதைப்பரு சீவல்களிலிருந்து நாற்றங்கால் அமைத்து இளம் நாற்றுகளை (25-35 நாட்கள் வயதான) எடுத்து நடவு செய்ய ஏதுவாக திருவள்ளூர் மாவட்டத்தில் 31 நிழல்வலை குடில் (Shade Net) அமைக்கப்பட்டு ஒருவிதைப்பரு நாற்று (Single bud chip seedings) உற்பத்தி தொடங்கியுள்ளது. ஒரு நிழல்வலை குடிலில் இருந்து ரூ. 1.5 இலட்சம் ஒரு விதை பரு நாற்றுகள் உற்பத்தி செய்யப்படும். திருவாலங்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலமாக விவசாயிகளை தெரிவு செய்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையினால் தண்ணீர் உபயோகத்திறன் கூடுகிறது. சொட்டுநீர் பாசன அமைப்பு மூலம் சரிவிகித அளவு உரங்களை உபயோகிப்பதன் மூலம் பயிர்களுக்கு ஊட்டச்சத்து பராமரிப்பு சிறப்பாக அமைகிறது. காற்று மற்றும் சூரியஒளி அதிக அளவு பயிர்களுக்கு கிடைப்பதனால் கரும்பில் சர்க்கரை கட்டுமானம் அதிகரிக்கிறது. மேலும், சாதாரண முறையில் கரும்பு நடவு செய்வதன் மூலம் கிடைக்கும் சராசரி மகசூல் 40 மெட்ரிக் டன் இத்திட்டத்தின் படி நடவு செய்வதன் மூலம் ஒரு பயிரிலிருந்து கிளைவிடும் முளைப்புகளின் எண்ணிக்கை அதிகமாவதால் கிடைக்கும் சராசரி மகசூல் 60 மெட்ரிக் டன். நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறை திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் மொத்த சாகுபடி செலவு குறைந்து மகசூல் 150% அதிகமாகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு.குணசேகரன், துணை இயக்குநர் திரு.எபினேசன், திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் திரு.ஜெயராமன், உதவி இயக்குநர் திரு.ராமு, திருத்தணி வட்டாட்சியர் திரு.நரசிம்மன், அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**